28th March 1963]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: 'போலீசுக்கு அந்த அதிகாரம் கிடையாது, ஹெல்த் டிபார்ட்மெண்டுக்குத்தான் அந்த அதிகாரம் இருக்கிறது' என்று நான் முதல் கேள்விக்குப் பதிலளித்தேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்த வழக்குகளில் சேலம் கூட்டுறவு பால் சப்ளை யூனியன் தலைவர் மீது தொடரப்பட்ட வழக்கும் அடங்கி இருக்கிறதா? அந்த வழக்கில் கொடுத்த தண்டனை என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: மொத்தம் 381 வழக்குகள் பதிவு செய்யப்பட்டதில் 319 வழக்குகள் தண்டனையில் முடிந்தன. கனம் அங்கத்தினர் கேட்கிறதைப்பற்றித் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

Trees (Illicit cutting)

* 417 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether it is a fact that illicit cutting of 2-C and other trees belonging to the Government is taking place in Krishnagiri taluk in Salem district;

(*b*) if so, the number of cases detected so far;

(*c*) the steps taken to put an end to such illicit cutting of trees; and

(*d*) the details thereof?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) No.

(*b*) Does not arise.

(*c*) & (*d*). In each taluk there is a taluk Committee including officers of the Police Department to discuss how to maintain the avenues on the road sides and to prevent the illicit cutting and avenue thefts and to take suitable measures. The Police Department have arranged for the Highways road patrols to put an end to the illicit cuttings and avenue thefts. The Panchayat Unions to which the usufructs of avenues are leased out are also made responsible for the safeguard of avenues on the road margins.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: ரெவினியூ இலாக்காவினால், கீழ் பவானிப் பிரதேசத்தில் இந்த ஆண்டு நெல் வைத்த பகுதிகளில் தண்டத் தீர்வை விதிக்கப்பட்டதை விலக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இந்தக் கேள்வி 415-ஆம் எண்ணுள்ள கேள்விக்கு உப-கேள்வி ஆகும். இருந்தாலும், நான் இதற்குப் பதில் சொல்ல முடியும்.

கனம் சபாநாயகர்: இப்பொழுது எப்படிப் பதில் சொல்ல அனுமதிக்க முடியும்? (சிரிப்பு.)

[28th March 1963

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: கிருஷ்ணகிரி தாலூகா, காவேரிப்பட்டணம் பிர்க்காவில் இம்மாதிரி மரங்கள் வெட்டுவது அதிகமாக நடந்துகொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. இதைப் பற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இதைத் தனியாக எழுதி அனுப்பினால், நான் அதைப் பரிசிலனை செய்யத் தயாராயிருக்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: விறகுப் பஞ்சம்தான் இப்படி மரம் வெட்டப்படுவதற்குக் காரணமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: விறகுப் பஞ்சம் இருக்கும் காரணத்திற்காக கள்ளத்தனமாக மரம் வெட்டுவதை நாம் ஒரு பொழுதும் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. குற்றம் செய்வதை அனுமதிக்க முடியாது. விறகுப் பஞ்சத்தைத் தீர்க்க வேண்டும் என்கிற பிரச்னை வேறு, மரங்களைப் பாதுகாக்கிற பிரச்னை வேறு.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—PRESENTATION OF THE REPORT OF THE COMMITTEE ON ESTIMATES ON MOTOR VEHICLES TAX ADMINISTRATION.

Sri T. M. NALLASAMY: Hon. Speaker, Sir, I, Chairman, Committee on Estimates, present the Report of the Committee on Motor Vehicles Tax Administration.

III.—VOTING ON DEMANDS FOR SUPPLEMENTARY GRANTS FOR 1962–63.

DEMAND NO. II—MOTOR VEHICLES ACTS—ADMINISTRATION.

The Hon. Sri M. BHAKTAVATSALAM: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a further sum not exceeding Rs. 7,200 under Demand No. II—Motor Vehicles Acts—Administration.'

Sri RAMA ARANGANNAL: Sir, I move—

'That the allotment of Rs. 7,200 under Demand No. II—Motor Vehicles Acts—Administration, be reduced by Re. 1.'

Mr. SPEAKER: The Demand and the cut motion are before the House for discussion. கனம் அங்கத்தினர் ஏதாவது குறிப்பிடப் போகிறார்களா?

திரு. இராம. அரங்கண்ணல்: நான் 'நோட்டீஸ்' கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையில் குறிப்பிட்டுள்ளதைத் தவிர நான் ஒன்றும் இப்பொழுது பேச விரும்பவில்லை.